CEMCA

# செவிச்செல்வம்

## "Diploma in Community Radio & Mass Communication"

# Radio Enabled Learning

August -2019

STUDY MATERIAL

CHAPTER 3 - RESEARCH AND ANALYSIS FOR COMMUNITY RADIO

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# QUANTITATIVE METHODS

## ஊடக ஆராய்ச்சி அளவீட்டு முறைகளும் சமுதாய வானொலி இயக்கமும்

CHAPTER - 3

EPISODE -13

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# ஆராய்ச்சி முறைகள் (Research Methods)

- அளவு முறைகள்
- மக்கள்தொகை கணக்கெடுப்பு
- கணக்கெடுப்பு முறைகள்
- உற்றுநோக்கல் முறைகள்
- குழுவுக்குள்ளிருந்து உற்றுநோக்கல்
- குழுவுக்கு வெளியிலிருந்து உற்றுநோக்கல்
- இணையவழி நேரடி கண்காணிப்பு

# அளவு முறைகள் *(Quantitative Methods)*

- எண்களின் மீது கவனம் செலுத்துகிறது.
- ஏனெனில் தகவல்தொடர்பு நடவடிக்கைகளையும் அதன் நிகழ்வுகளையும் பற்றிய விரிவான புரிதலை அறிந்துகொள்ள துல்லியமான புள்ளிவிவரக் கருவிகளையும், மாதிரிகளையும் பயன்படுத்தப்படுகின்றன.
- மேற்கண்ட இப்புரிதலுக்கு கணக்கெடுப்பு முறைகளும் தேர்தல் கருத்து கணிப்புமுறைகளும் சிறந்த உதாரணங்களாக விளங்குகின்றன.
- பல்வேறு சூழ்நிலைகளில் நிகழ்கால அல்லது எதிர்காலத்தைய தொடர்புகளை அறிந்து கொள்ளவும் முயற்சி செய்கின்றன.

# தரம் சார்ந்த முறைகள் (*Qualitative Methods*)

- நிகழ்ச்சிகள் அதன் பொருண்மை கொண்டே தனது பாதையை அமைத்துக்கொள்கிறது.
- இம்முறை ஆய்வுகள் தனித்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளின் மீது கவனத்தைச் செலுத்துகிறது.
- ஒற்றை நிகழ்வுகள், தனித்துவம் வாய்ந்த நிகழ்வுகள் மற்றும் சமூக அல்லது தகவல் பரிமாற்ற அலகுகளின் மீது ஆய்வுகளை மேற்கொள்கிறது.
- இருப்பினும் இவை எந்த வகையைச் சார்ந்த நிகழ்ச்சிகள் என்ற தேடுதலுக்குக்கூட முயற்சி செய்வதில்லை.

# மக்கள்தொகை கணக்கெடுப்பு *(Census Method)*

- மக்கள்தொகை கணக்கெடுப்பு முறையில் அமைந்த ஆராய்ச்சியானது அரிதாகவே பயன்படுத்தப்படுகிறது.
- அதிகமான செலவு
- ஆற்றல் வாய்ந்த மனிதர்களுக்கு ஆர்வம் இல்லாமை
- மீண்டும் மீண்டும் முயற்சிகளை மேற்கொள்ளாமை
- போன்ற காரணங்களால் மக்கள்தொகை கணக்கெடுப்பு முறை அதிகமாகப் பயன்படுத்தப்படுவதில்லை.

# கணக்கெடுப்பு முறைகள் (*Survey Method*)

- நிகழ்ச்சிகள் மட்டுமல்லாது அவற்றின் செயல்பாடுகள் போன்றவற்றிலும் கணக்கெடுப்பு நடக்கிறது.
- தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சி என்பது அனுபவமிக்க ஆய்வாகும்.
- இதில் நிகழ்ச்சிகளின் பண்புகளைத் தெரிந்துகொள்ள நேர்காணல் அல்லது கேள்விகள் போன்ற முறைகள் பயன்படுத்தப்படுகிறது.
- கணக்கெடுப்பு முறையின் மூலம் ஒரு வரையறுக்கப்பட்ட அளவு பணத்தினை செலவு செய்து மக்களிடமிருந்து தகவலைப் பெற்றுக்கொள்ளுதலும் உண்டு

# கணக்கெடுப்பு முறைகள் *(Survey Method)*

- அதே சமயத்தில் அந்தத் தகவலானது பரந்த மக்களின் எண்ணங்களுக்குப் பயன்படும் வகையிலும் அமைதல் வேண்டும்.
- அனைத்து வகையான தகவல்தொடர்பு படிப்புகளுக்கும் இந்த ஆய்வு முறையினைப் பயன்படுத்தலாம்.
- இதில் இரண்டு அடிப்படை ஆய்வு முறைகள் உள்ளன.

    1. கேள்வி அடிப்படையிலான ஆய்வுகள்
    2. பேட்டி அடிப்படையிலான ஆய்வுகள்

# உற்றுநோக்கல் முறைகள் *(Observation Method)*

- ‘கவனித்தலே’ கருத்தாகவும் நோக்கமாகவும் செயல்படுகிறது
- உற்றுநோக்கலின் வழக்கமான பார்வையில் ஒரு நிகழ்வானது

    1. நிகழ்வு
    2. நிகழ்ச்சி
    3. அதிசய சம்பவங்கள்

- என பல உண்டு. அவை அந்தந்த நிகழ்வுகள் நடைபெறும் இடத்தினைப் பொறுத்தே அமையும்.
- அடிப்படையில் இது ஒரு தரமான ஆய்வுமுறை ஆகும்.

# குழுவுக்குள்ளிருந்து உற்றுநோக்கல் *(Participatory Observation)*

- ஆராய்ச்சியாளர்கள் மக்களோடு இணைந்து ஒரு குழுவாகச் செயல்படவேண்டும்.
- ஏனெனில் மக்கள் பொதுவாக தங்கள் வாழ்க்கை முறையினை இயற்கையின் அடிப்படையில் அமைத்துக் கொள்கிறார்கள்.
- மக்களோடு மக்களாகச் செயல்படும்போதுதான் அவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட அல்லது ஏற்படுகின்ற சிக்கல்களை உற்றுநோக்கவும் அதே நேரத்தில் அவற்றினைப் பதிவு செய்யவும் முடியும்.
- ஆகவே மக்களின் பிரச்சனைகளை அறிந்துகொள்ள ஆராய்ச்சியாளர்கள் களப்பணியில் ஈடுபடுதல் வேண்டும். இத்தகைய ஆய்வுகள் தரம் மற்றும் அளவு ஆகிய இரண்டையும் உறுதி செய்கிறது.

# குழுவுக்கு வெளியிலிருந்து உற்றுநோக்குதல் *(Non – Participatory Observation)*

- இம்முறையில் ஆராய்ச்சியாளர்கள் அந்தக் குழுவின் ஒரு பகுதியல்ல.
- ஆராய்ச்சியாளர்கள் குழுவிற்கு வெளியிலிருந்து நிகழ்வுகளை கவனிக்கின்றனர். ஆகையால் குழுவில் உள்ளவர்களின் சொந்த விசயங்களைப் பற்றி தெரிந்துகொள்ளும் வாய்ப்பு குறைகிறது.
- இதனால் நிகழ்ச்சிக்கான பொருண்மை அதிகமாகவோ அல்லது குறைவாகவோ கிடைக்க வாய்ப்புள்ளது.
- குழுவிற்குள்ளிருந்து செயல்படும் ஆராய்ச்சியாளர்களின் உரையாடல்களைப் போன்றே இதில் இருக்கும் ஆராய்ச்சியாளர்களின் உரையாடல்கள் அனுதாபத்தையும் கவனத்தையும் பிரதிபலிக்கும் வகையில் அமைகிறது.

# இணையவழி நேரடி கண்காணிப்பு
## *(Online Real – time Monitoring)*

- வானொலி நிகழ்ச்சிகளை அலைபேசி வாயிலாகவோ அல்லது இணையத்தில் பதிவேற்றியோ வழங்கும்போது மட்டுமே மேற்கொள்ள முடியும்.
- இணையவழி இலவச மென்பொருள்களோ அல்லது கட்டணவழிச் சேவைகளோ வானொலி நேயர்களைக் கண்டறிவதற்கும், அவர்கள் எத்தகைய நிகழ்ச்சிகளை விரும்புகிறார்கள், எத்தகைய நேரத்தில் அந்நிகழ்ச்சியைக் கேட்க விரும்புகிறார்கள் மேலும் அந்நிகழ்ச்சிகளைக் கேட்பதற்கு எவ்வளவு நேரத்தை செலவிட விரும்புகிறார்கள் போன்றவற்றை இத்தகைய ஆய்வு முறையின் மூலம் கண்டறியலாம்.